**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 329/2023 P.W. 4/L.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. குமார் கோலப்பதாஸ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. வேலாயுதன் பிள்ளை | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 16.07.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக பணிச் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது இல்லை. வழக்கு சம்பவம் பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 02.07.2023 - ம் தேதி 09.30 மணிக்கு வெள்ளிச்சந்தை உதவி ஆய்வாளர் அவர்கள் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் சதீஸ்குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு ஆதரவாக வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

**இல்லை .**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 329/2023 P.W. 5/L.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சதீஸ்குமார் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. முருகப்பபிள்ளை | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 16.07.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து போக்குவரத்து கழகத்தில் கண்காணிப்பாளராக பணிச் செய்து வருகிறேன். 02.07.2023 ம் தேதி காலை 09.30 மணியளவில் சரல் அருகே போலீசார் விசாரித்து அது குறித்து எழுதி என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் குமார் கோலப்ப தாஸ் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை :**

நானும் குமார் கோலப்பதாஸ்ம் போக்குவரத்து கழகத்தில் பணிபுரிவதால் நண்பர்கள் என்றால் சரிதான். அ.சா4 ஐ நான் அரசன்விளையில் இருந்து காலை 09.30 மணிக்கு குருந்தன்கோடு வரை அழைத்துச் சென்றேன். அ.சா4 கூப்பிட்டதால் தான் நான் வந்தேன் என்றால் இல்லை, நான் தற்செயலாக வந்தேன். சம்பவயிடத்திற்கு 2 போலீசார் வந்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் ரோட்டின் தெற்கு பக்கம் கடையும், வடக்கு பக்கம் வீடும் உள்ளது.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் சரல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கும் இடையே 100 அடி தொலைவு இருக்கும். நான் கையொப்பம் தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது. நான் சம்பவயிடம் செல்லாமலும், போலீசார்

கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துக்கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.